**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | : PW-4 | Date | : 29.02.2024 |
| Case No. | : **O.S.492/2019** | Nationality | : Indian |
| Name | : கார்த்திக் ( கிராம நிர்வாக அலுவலர், கோடந்தூர் வடக்கு கிராமம்) | Religion | : |
| | | Age | : 33 |
| Father's/Husband's Name | : | | |
| Village | : | | |
| Taluk | : | | |

வா.சா.4

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**முதல் விசாரணை :-**

நான் தற்போது கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி தாலுக்கா கோடந்தூர் வடக்கு கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததின்பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் கடந்த 2020 ம் ஆண்டிலிருந்து 2022 ம் ஆண்டுவரை திருவிடைமருதூர் தாலுக்கா அணக்குடி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்தேன். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் 24.11.2020 மற்றும் 10.01.2021 தேதிகளிட்ட 2 சான்றுகள் என்னால் வழங்கப்பட்டதுதான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி சான்றுகள் **சா.சா.ஆ 3 மற்றும் சா.சா.ஆ 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் 1429 பசலிக்கான அடங்கல் என்னால் வழங்கப்பட்டதுதான். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் 2.06.2021 ம் தேதியிட்ட அடங்கலில் எழுதப்பட்டுள்ள மேற்குறிப்பு என்னால் எழுதப்பட்டதுதான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். 2.02.2022 ம் தேதியிட்ட அடங்கலில் எழுதப்பட்டுள்ள மேற்குறிப்பு என்னால்

எழுதப்பட்டதுதான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் 25.06.2022 ம் தேதியிட்ட அடங்கலில் எழுதப்பட்டுள்ள மேற்குறிப்பு என்னால் எழுதப்பட்டதுதான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி மேற்குறிப்புகளில் அதில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை தண்டபாணி மகன் ரமேஷ் என்பவர் சாகுபடி செய்து வருவதாக நான் எழுதியுள்ளேன்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் எந்த தேதியிலிருந்து எந்த தேதி வரை அணக்குடி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன் என்றால் 01.10.2020 ம் தேதி முதல் 14.07.2022 ம் தேதி வரை பணிபுரிந்தேன். சாசாஆ 3 சான்றில் புல எண் விவரங்கள் அடிக்கப்பட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சான்றில் சான்று பெற்றவர் எதன் அடிப்படையில் சான்று பெற்றுள்ளார் என்ற விவரம் பூர்த்தி செய்யாமல் உள்ளது என்றால் சரிதான். சாசாஆ 4 சான்றில் உரிமை விவரம் என்ற இடத்தில் குத்தகை என்று எழுதி உள்ளேன் என்றால் சரிதான். அந்த குத்தகை தொடர்பான ஆவணங்கள் எதுவும் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. ஒரே நேரத்தில் ஒரே பசலிக்கு 2 அடங்கல் ஆவணங்கள் வழங்கப்படுமா என்றால் வழங்கப்படாது. அந்த அடங்கல் ஆவணங்களில் ரமேஷ் என்பவர் குத்தகை செய்து வருவதாக எழுதியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கான ஆவணங்கள் எதுவும் நான் பார்த்தேனா என்றால் இல்லை. நான் வாதி ரமேஷ் என்பவருக்கு வேண்டப்பட்ட நபர் என்பதால் அவர் கேட்டுகொண்டதற்கிணங்க எந்த ஆவணங்களையும் பார்வையிடாமல் சான்றுகள் மற்றும் அடங்கல் வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை.**

சாசாஆ 3 சான்றில் புல எண்கள் விவரத்தில் திருத்தப்பட்ட இடங்களில் நான் சுருக்கொப்பம் செய்துள்ளேன்.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

Sd/- N. Sivapalani,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.